


சேலத்தில் நடைபெறவுள்ள கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டுக்கு இளைஞர்களை தயார்படுத்தும் வகையில் புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் நேற்று புதுக்கோட்டையில் நடைபெற்றது. கழக இளைஞர் அணி செயலாளர்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய இக்கூட்டத்தில் அமைச்சர்கள் எஸ்.இரகுபதி, சிவ.வீ. மெய்யநாதன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் முத்துராஜா, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் சு. சண்முகம், மணிராஜன் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

### க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! ஜெ.ஞானசேகரன் முன்னிலை! நாத்திகம் நாகராஜன் வரவேற்புரை!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் - மாணவர்களுக்கான போட்டிகள்!

### அ.சுகுமார் தொடக்கவுரை! க.செல்வம் எம்.பி. - சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

காஞ்சிபுரம், ஆக.28-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் கல்லூரி மாணவ-மாணவிகளுக்கான திறனறிதல் பேச்சுப் போட்டி இன்று (28.8.2023) காலை 10 மணிக்கு உத்திரமேரூர், திருப்புவனத்தில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகித்து போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுகள்- சான்றிதழ் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார். ஒன்றியச்செயலாளர் கெ.ஞானசேகரன் முன்னிலை வகிக்கிறார்.

கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் நாத்திகம் நாகராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

அரசு கலைக்கல்லூரி முதல்வர் அ.சுகுமார் தொடக்க உரை நிகழ்த்துகிறார்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இதில் இரா.நாகன், எம்.எஸ்.சுகுமார், சி.கே.வி. தமிழ்ச்செல்வன், எஸ்.கே.பி.சீனிவாசன், எஸ்.சிகாமணி, பி.சசிகுமார், ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், வி.சுந்தரவரதன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.எம்.குமார், க.குமணன், டி.குமார், அ.யுவராஜ், எஸ்.சந்துரு, கே.திலகர் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தருவோரை எம்.ஆர்.தனசேகரன், ஏ.சங்கர், வல்லரசு செங்குட்டுவன், ஜெ.முல்லைவாணன், கே.ஆர்.டில்லிகுமார், சு.முரளிதரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கலைச்செல்வி ஜெகநாதன் நன்றி கூறுகிறார்.



திருச்சியில் நடைபெற்ற – கழக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்ற கழக இளைஞர் அணிச் செயலாளரும் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உடல்நலம் பாதிக்கப்பட்டு திருச்சி – அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள வெங்கடேஷ் குமாரை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி உடனிருந்தார்.

### திருநெல்வேலி மாவட்டம் – திசையன்விளை – மேம்படுத்தப்பட்ட

# அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீர் ஆய்வு!

### பணி நேரத்திற்கு வராத மருத்துவர் - மருத்துவமனைப் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவு!

நெல்லை, ஆக.28-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.08.2023) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திசையன்விளை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது சரியான நேரத்தில் பணியில் இல்லாத மருத்துவர், மருந்தாளுநர் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் அனைவர் மீதும் துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள துணை இயக்குனர், சுகாதார பணிகள் அவர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் மருத்துவமனை ஆய்வின்போது அங்கு நிறுத்தப்பட்டுள்ள நடமாடும் மருத்துவமனை வாகனத்தில் மருந்து பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டு சரிவர பாதுகாப்பின்றி இருந்ததை பார்த்தஅமைச்சர் அவர்கள், அங்குள்ள செவிலியரிடம் விசாரித்த போது அந்த வாகனத்தின் ஓட்டுனர் பணிக்கு வராததையும், அந்த வாகனத்தில் இருந்த மருந்துகள் பாதுகாப்பின்றி இருப்பதை கண்ட அமைச்சர் அவர்கள், அலட்சியத் தன்மையுடன் பணியாற்றியதை அறிந்து, அந்த ஓட்டுநர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் அவர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், நாய்க்கடி மற்றும் பாம்புகடி மருந்துகள் கையிருப்பு உள்ளதை பொதுமக்கள் தேவைக்கேற்ப அறிந்து பயன்படுத்தும் வகையில், அதற்குரிய மருந்து இருப்பு அறிவிப்பு பலகைகள் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வைக்குமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துறை இயக்குனரை அறிவுறுத்தினார்.



முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தினை அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டம், அமைந்தகரையில் உள்ள மஞ்சக்கொல்லை, சென்னை மாநகராட்சி துவக்கப் பள்ளியில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் துவக்கி வைத்தார். இதில் அண்ணாநகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





